Kanton Zürich
Bildungsdirektion
**Volksschulamt**
Pädagogisches, Lehrplan 21

Kontakt: Projekt Lehrplan 21, Projektleitung, Walchestrasse 21, 8090 Zürich
Telefon 043 259 22 99, lehrplan21@vsa.zh.ch

**Tamilisch**

# ஆரம்ப பாடசாலையின் 3 முதல் 6 வது வகுப்புக்கான மதிப்பெண் சான்றிதழ் (சுழற்சி 2 )

## பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான தகவல்கள்

### கற்பித்தல், படிப்பது மற்றும் மதிப்பீடுபற்றிய விபரங்கள்

கற்பித்தல், படிப்பது மற்றும் படிப்பின் முன்னேற்றத்தை கணிப்பிடுவதும் ஒரு வெற்றிகரமான கல்வியை பகிருவதின் அடிப்படையாகும். மாணவர்கள் அவர்களின் மதிப்பீடை அவர்களின் படிப்புக்கு ஊக்குவிக்கும் அம்சமாக உணரவேண்டும்.

பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்களும் படிப்புக்கு அடிப்படையாக அமையும். இதன் அடிப்படையில், ஆசிரியர்கள் கற்ப்பித்தலுக்கான இலக்குகளை அமைக்கிறார்கள். மாணவர்களின் திறமைகளை வளர்க்கும்விதமாக ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்கிறார்கள் மற்றும் சவால்களை அமைக்கிறார்கள். மாணவர்களின் படிப்பின் முனென்றம் மற்றும் அவர்களின் நடத்தை பற்றிய கருத்துக்களையும் ஆசிரியர்கள் தெரிவிப்பார்கள். இது மாணவர்களுக்கு அவர்களின் படிப்பு முன்னேற்றும் பற்றிய நிலமையை விளங்க உதவும் மற்றும் அவர்களின் அடுத்த கட்ட படிப்புக்கு வழிகாட்டும். மாணவர்கள் தேவையான திறன்களை மற்றும் தேவையான கற்றல் இலக்குகளை அடைத்திருக்கிறார்களா என்பதை ஆசிரியர்கள் அவ்வப்போது கண்கணிப்பார்கள்.

### எப்படி ஒரு சான்றிதழ் அமைக்கப்பட்டிருக்கும்?

ஆசிரியர்கள் ஆண்டுக்கு இரண்டு முறை ஒரு சான்றிதழை வழங்குகிறார்கள்: இது ஜனவரி இறுதி மற்றும் பள்ளி ஆண்டு முடிவிலும் வழங்கப்படும். பாடத்திடத்தின்படி அனைத்து பாடங்களுக்கும் மதிப்பெண் வழங்கப்படும். (3 வது வகுப்பின் சான்றிதழ் இதிலிருந்து மாறுபடும். அதில் ஜேர்மன் மொழிக்கும் மற்றும் கணித பாடத்துக்கு மட்டும் மதிபெண் வழங்கப்படும்.)

மொழி பாடங்களின் மதிப்பெண் பின்வரும் திறமைகளை உள்ளடக்கும்: விளக்குவது, வாசித்தல், பேசுவது மற்றும் எழுதுதல். 3 வகுப்பில்,

ஆங்கிலம் விளக்குவது மற்றும் பேசுதல் ஆகியவை மட்டுமே மதிப்பீட்டில் சேர்க்கப்படும்.

சில முக்கிய காரணங்களுக்காக, ஒரு மதிப்பீடு சாத்தியம் இல்லை என்றால், அது தவிர்க்கப்படும். பாடத்திட்டத்தில் இல்லாத திறமைகளுக்கு மதிப்பெண் சேர்க்கப்படாது (உதாரணமாக விளையாட்டு பயிற்சிகள்).

6 முதல் 1 வரையான மதிப்பெண்கள் ஒரு பாடத்தில் அடையும் தேர்ச்சியை குறியிடும். இவை ஒரு ஆண்டில் முதல் மற்றும் இரண்டாம் தவணையில் ஒரு மாணவர் படிப்பில் அடைந்த முன்னேற்றத்தை வெளிப்படுத்தும். ஒரு மதிப்பெண் சான்றிதழ் ஆசிரியரின் தொழில்சார்ந்த தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டது . அது மாணவரின் எழுத்து மூல பரீட்சையில் கிடைத்த சராசரி மதிப்பெண் இல்லை. ஆசிரியரின் கணிப்பீட்டில் உதாரணமாக மாணவரின் பேச்சுத்திறன், வாய்வழி மற்றும் எழுத்துமூல பரீட்சைகளின் பெறுபேறுகள், மாணவரின் ஆக்கங்கள், விரிவுரைகள் ஆகியவை ஆசிரியரின் மதிப்பெண் தீர்மானத்துக்கு பயன்படுத்தப்படும்.

சான்றிதழின் தரவுகள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன:

| மதிப்பெண் | 6 | 5 | 4 | 3 | 2 [மற்றும்] 1 |
|---|---|---|---|---|---|
| | மிக சிறப்பான தேர்ச்சி<br>Sehr gut | சிறப்பான தேர்ச்சி<br>gut | போதுமான தேர்ச்சி<br>genügend | தேர்ச்சி இல்லை<br>ungenügend | மிகவும் குறைந்த நிலைமை<br>(sehr) schwach |
| விளக்கங்கள் | [மாணவர் அல்லது மாணவி ...] | | | | |
| பாடத்திட்டத்தின் இலக்கை அடைந்த நிலைமை | பாடத்தின் மிக கடினமான இலக்குகளையும் வெற்றிகரமாக அடைகிறார் | பாடத்தின் இலக்குகளையும் சில கடினமான இலக்குகளையும் சரியாக அடைகிறார் | பாடத் தின் அடிப்படை இலக்குகளை அடைகிறார். | பாடத் தின் அடிப்படை இலக்குகளில் சில வற்றை இன்னும் அடையவில்லை . | பாடத் தின் அடிப்படை இலக்குளில் பலவற்றை இன்னும் அடையவில்லை |
| வேலைகளை சரியாக செய்வது | கடினமான வேலைகளையும் சிறப்பாக செய்கிறார் | சில கடினமான வேலைகளையும் சரியாக செய்கிறார் | அடிப்படை வேலைகளை சரியாக செய்கிறார் | அடிப்படை வேலைகளை தேவைப்பட்ட அளவில் சரியாக செய்வதில்லை | அடிப்படை வேலைகள் அனைத்தும் சரியாக செய்வதில்லை |

பின்வரும் அம்சங்கள் மதிப்பெண் தீர்மானத்துக்கு சேர்க்கப்படுவதில்லை: உதாரணமாக ஊக்கமற்ற நிலைமை, வகுப்பறையில் பாடத்தில் அக்கறையின்மை, கவனக் குறைவு, கவனமாக படிப்பது, ஊக்கமாக செய்ல்படுவது. ஆனால் மேல் குறிப்பிடப்பட்ட மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான விடயங்கள் தேர்வு அறிக்கையின் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

கற்றல் மதிப்பீடு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான மதிப்பீடுகள் நான்கு பிரிவுகளில் கணிக்கப்படும். இடது புறத்திலிருந்து இரண்டாவது நெடுவரிசையில் (gut) உள்ள கணிப்புகளுக்கு அமைய வழமையாக வழங்கப்படும்.

**சான்றிதழ் படிவம்**

சான்றிதழ்கள் அனைத்தும் வகுப்பு ஆசிரியரால் பாதுகாப்பாக பராமரிக்கப்படும். அனைத்து சான்றிதழ்களும் ஆரம்பப் பள்ளியின் முடிவில் அல்லது பாடசாலை மாற்றத்தின் போது மாணவர்களிடம் கையளிக்கப்படும்.

பள்ளிக்கல்வி, மதிப்பீடு, சான்றிதழ்கள் மற்றும் கண்காணிப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களை பின்வரும் இணையப்பதிவில் காணலாம்:

www.zh.ch/zeugnisse-volksschule